

மின்நிலா
ஜூன் 29, 2020





engalblog.blogspot.com

# எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ....

## இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

## என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

## நன்றி.

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020

படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

=============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**
**K G GOUTHAMAN**
**KAYJEE**
**K G Y RAMAN**
**K S**

# உள்ளே ...



| பொருள் | பக்கம் |
|---|---|
| மைசூர் ரசம் - ரமா ஸ்ரீநிவாசன் ரெஸிப்பி | 2 |
| விடுகதை | 6 |
| அப்பனும் அம்மையும் :: சிறுகதை :: துரை செல்வராஜூ | 7 |
| கேள்வி, பதில்கள் | 17 |
| வாசகர்கள் அனுப்பிய தகவல்கள் | 20 & 21 |
| அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி | 22 |
| ஒரு கிடார் தேய்ந்து புல்லாங்குழல் ஆகிறது.. ஸ்ரீராமின் அனுபவங்கள் | 27 |
| பலசரக்கு ..... ஸ்ரீராம் | 32 |
| சினிமாப் பாடல்கள் எங்கள் தேர்வு | 36 |
| துர்காமாதா: எனது வாசிப்பு அனுபவங்கள் – அரவிந்த். | 41 |
| விளம்பரங்கள் | 44 & 45 |
| அ ஆ இ எ அ -- வாசகர்கள் கருத்துகள் | 46 |
| பழங்கணக்கு - எங்கள் ப்ளாக் பிறந்தநாள் | 49 |
| பாசிடிவ் செய்திகள் | 51 |
| எலன் மஸ்க் – ஏ ஸைன்டிஃபிக் மார்வெல் ரமா ஸ்ரீனிவாசன் கட்டுரை | 53 |
| சுவாரஸ்யமான நபர்கள் :: By KGY | 60 |
| எழுதுபொருள் :: kayjee | 62 |

# மைசூர் ரசம் - ரமா ஸ்ரீநிவாசன் ரெஸிப்பி

கோவிட் 19 தாக்கத்தால் வீட்டில் நாமே சமையல் என்று ஆகி விட்ட படியால், புது ரச, உணவு மற்றும் பதார்த்த வகைகள் முயன்று பார்க்கும் வாய்ப்பும் நேரமும் கிடைத்ததால், இதோ என்னுடைய ரெசிப்பி. இதன் பெயர் “மைசூர் ரசம்”. உங்கள் வீட்டிலும் முயன்று பாருங்கள். வித்தியாசமாக இருக்கும்.

தேவையான பொருட்கள் :

நல்லெண்ணை : 2 டீ ஸ்பூன்
புளி : ஒரு எலுமிச்சைப் பழம் அளவு
துவரம்பருப்பு : 100 கிராம். (நன்றாக குக்கரில் வேக வைத்தது)
பெருங்காயம் : 1 டீ ஸ்பூன்
தனியா : 2 டீ ஸ்பூன்
கடலை பருப்பு : 4 டீ ஸ்பூன்
சிவப்பு மிளகாய் : 4
துருவிய தேங்காய் : 2 – 3 டீ ஸ்பூன்
முழு கருப்பு மிளகு : 8
வெல்லம் : 2 டீ ஸ்பூன்
உப்பு : உங்கள் சுவைக்கேற்ப

தாளிப்பதற்கு :
நெய் : 2 டீ ஸ்பூன்
கடுகு : 1 டீ ஸ்பூன்
சிவப்பு மிளகாய் : உடைத்த ஒன்று
கருவேப்பிலை : 1 கொத்து

செய்முறை :

துவரம்பருப்பை நன்றாக குக்கரில் இலை இலையான பதத்திற்கு வேக வைத்துக் கொள்ளவும். இது குழையக் கூடாது என்பது மிக முக்கியம்.



இப்போது, புளியை நீரில் நன்றாக கரைத்து, வேண்டிய அளவிற்கு உப்பு சேர்த்து கொதிக்க விடவும்.

இன்னொரு வானலியில் எண்ணையை சுட வைத்து, தனியா, கடலை பருப்பு, சிவப்பு மிளகாய், தேங்காய் துருவல் மற்றும் பெருங்காயத்தை சேர்த்து நன்றாக வறுத்துக் கொள்ளவும். நல்ல வறுத்த தேங்காய் மற்றும் பருப்புகளின் மணம் வந்ததும் கீழே இறக்கி ஆற வைக்கவும். இவை யாவும் நன்றாக ஆறிய பின், மிக்ஸியில் தண்ணீர் கலந்து மென்மையாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.



புளித் தண்ணீரில் பச்சை வாசம் மறைந்த பின், வேக வைத்த துவரம்பருப்பு கலவையை சேர்த்துக் கொதிக்க விடவும்.

இதனுடன் அரைத்த விழுதையும் சேர்த்துக் கலந்து நன்றாக கொதிக்க விடவும். உங்களுக்கு வேண்டிய அளவு தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.

சிறிது வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்தால், ருசி அதிகரிக்கும். தனியாக இன்னொரு வாணலியில் நெய்யை சுட வைத்து கடுகு, ஒரு சிவப்பு மிளகாய், கருவேப்பிலை யாவையையும் வறுத்து, கொதிக்கும் ரசத்தின் மேல் விட்டு அடுப்பை அணைக்கவும்.





சாதத்தின் மீது கெட்டி நெய் விட்டு சுடச் சுட ரசத்தை பரிமாறவும். இதனுடன் பருப்பு துவையல் சாப்பிடுவதற்கு மிக ருசியாக இருக்கும்.

இதில் என்ன விஷேஷம் என்றால், பாத்திரத்தின் அடியிலிருந்து கரண்டியால் எடுத்தால், குழம்பு போலவும், தெளிவாக மேலிருந்து எடுத்தால், ரசமாகவும் உண்ணலாம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.



நண்பர்களே, மிக ருசியாக இருந்ததால், உங்களுடன் பகிர்கிறேன்.

======

ஆறு கால் உதவியுடன் மலை ஏறுவான், ஐந்து கையானைத் தொழுவான், நான்கு முகத்தால் திக்கெட்டிலும் பார்த்திருப்பான், மூன்று முறை கூவியழைத்து, இருகரம் குவித்து, எல்லாவற்றிலும் ஒன்றாகி, மறைவான் - அவன் யார்? (விடை அடுத்தவாரம்)

# அப்பனும் அம்மையும்
## துரை செல்வராஜூ

==================

ஸ்ரீ காமாக்ஷி இல்லம்.

மஞ்சளும் சிவப்புமாக பெயர்ப் பலகை...

ஆதரவற்ற முதியோரையும், அனாதையாக நிற்கும் பெண் பிள்ளைகளையும் ஆதரவுடன் அரவணைத்துக் கொண்டிருக்கும் அன்பு இல்லம்..

வாசலின் கம்பிக் கதவுகளுக்கு அந்தப் பக்கமாக பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார்...

இவளைக் கண்டதும் - "யாரம்மா பார்க்கணும்?..." - என்றபடி புன்னகைத்தார்...

விவரம் சொன்னாள்...

" ஓ!.. அவுங்களா!... இருங்க... அம்மா...கிட்ட சொல்லிட்டு வர்றேன்..."

எழுந்து அருகில் இருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தார்...

சில விநாடிகளில் மேற்பார்வையாளரான அந்த அம்மா தடிமனான கண்ணாடியுடன் வெளியே வந்தார்கள்...

" அடையாள அட்டை கொண்டாந்திருக்கீங்களா?..."

"இருக்கும்மா!...

அதை வாங்கிப் பார்த்தபடி கைக் கடிகாரத்தை நோக்கஅது 3: 25 என்று காட்டியது...

" உள்ளே வந்து உக்காருங்க... வரச்சொல்றேன்!... " - மீண்டும் அறைக்குள் சென்று விட்டார்..

வாசற் கதவின் திட்டி வாசலைத் திறந்து விட்டார் பெரியவர்... புன்னகையுடன் உள்ளே நுழைந்த தங்கமணி கைப்பையில் இருந்து ரெண்டு சாத்துக்குடிப் பழங்களை எடுத்துக் கொடுத்தாள்...

" சந்தோசம்... ம்மா!... " - பெரியவரின் முகத்தில் புன்னகை... அலுவலகப் பணியாளாரான இளம் பெண் - தான் எடுத்து வந்த கனத்த பேரேட்டில் விவரங்களை எழுதி தங்கமணியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டாள்...


அலுவலக அறையின் எதிர்ப்புறமாக பார்வையாளர் கூடம்...விசாலமாக இருந்தது... வண்ணம் பூசப்பட்டிருந்த அந்த சுவர் முழுதும் மனதை இறை நெறியில் செலுத்தும்படியான தேவாரப் பாடல்கள் எழுதப்பட்டு கூடவே அழகழகான ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன...

**உனக்கு வரும் துன்பங்களால்**
**துவண்டு போகாதே, நடப்பவை**
**எல்லாம் உன் நன்மைக்காக**
**தான் நடக்கிறது என்று நம்பு.**
**நீ சகல வளங்களையும்**
**பெற்று வாழ்வாய்...**

**சிவமயம்**


வணங்கித்தொழு வாரவர் மால்பிர மன்மற்றும்
வானவர் தானவர் மாமுனிவர்
உணங்கற்றலை யிற்பலி கொண்ட லென்னே
உலகங்கள் எல்லாமுடை யீர்உரையீர்
இணங்கிக் கயல்சேல் இளவாளை பாய
இனக்கெண்டை துள்ளக்கண் டிருந்தஅன்னம்
அணங்கிக் குணங்கொள் அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 5

**ஆஞ்சநேயரைத் தழுவிக் கொண்டிருக்கும் ராமன்.. குசேலரை அணைத்துக் கொண்டிருக்கும் கிருஷ்ணன்..**





**சம்பந்தருக்கு ஞானப் பாலூட்டும் அம்பிகை... திருநாவுக்கரசருக்கு அன்னம் பாலிக்கும் சிவபிரான்..**



ஔவையாருக்கு நாவற்பழம் உலுக்கி விடும் ஞானபண்டிதன்.. ஔவையாரைக் கயிலாயத்திற்கு ஏற்றி விடும் மகாகணபதி..

கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படிக்கு இருந்த - சித்திரங்கள் அனைத்தும் ஏதோ ஒன்றினைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன... அந்தப் பக்கமாக புத்தம் புதிய மண் பானையும் எவர்சில்வர் குவளையும்..

ஒரு குவளை முகந்து குடித்தாள்.. புத்துணர்வு வந்த மாதிரி இருந்தது...

கூடத்திலிருந்து எவரும் சட்டென உள்ளே சென்று விடாதபடிக்கு இருந்த சுழலும் கதவுக்கு அப்பால் -

அதோ... அக்கா தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருக்கிறார்கள்...

அக்கா - தங்கமணியின் பெரியம்மா மகள்...

நாற்பது வருசங்களுக்கு முன்னால் ஓகோ!.. - என்றில்லா விட்டாலும் நல்லபடியாக வாழ்ந்த குடும்பம்...

பதினெட்டு வயதில் கல்யாணம் ...

ஓராண்டைக் கடந்த நிலையில் என்ன என்று தெரியவில்லை.. வீட்டை விட்டு வெளியே சென்றவர் திரும்பி வரவேயில்லை...

பதறிப் போன பெரியவர்கள் கண்ணீர் விட்டுக் கதறினார்கள்.. ஓடினார்கள்... ஊர் ஊராகச் சென்று தேடினார்கள்...

ஒரு தகவலும் தெரியாத நிலையில் - ஒருநாள் நள்ளிரவில் சாமக் கோடங்கி சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போய் தேடும் படலத்தைக் கைவிட்டார்கள்...

மகளின் நிலை கண்டு துடித்த பெற்றோர் நொந்து அடுத்தடுத்து காலகதியடையவும் நிலைமை கேள்விக் குறியானது...

சொந்த பந்தங்கள் ஆதரவுக் கரம் நீட்டின... ஆனாலும் யாரையும் அண்டியிருக்கக் கூடாது...சொந்தக் காலில் நிற்க வேண்டும்!.. - என்று மூண்டெழுந்த வைராக்கியம் மனதிலும் தோளிலும் ஆகி நிற்க - நாடார் மில்லில் தவிடு அள்ளிப் போடும் வேலை கிடைத்தது...

ஹல்லர் பெட்டியில் விழும் குறுநொய்யுடன் நாலணா கிடைக்கும்... அதற்கு மேல் வாரச் சம்பளம் பதினைஞ்சு ரூபாய்...

"ரெண்டு வேளைக்கு இதுவே அதிகம்!.. " - என்று ஒற்றைப் பனையாய் தனித்த தவ வாழ்வில் வயோதிகமும் வந்துற்றது...

அவ்வப்போது உடல் நலக்குறைவும் சேர்ந்து கொள்ள கூட இருந்து கவனித்துக் கொள்ளும்படிக்கு யாரும் அமையவில்லை..

அவரவர் வாழ்வே அவரவர்க்கு அவஸ்தையாகிப் போயிருக்கும் காலத்தில் இங்கு வந்து சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் தானாகவே வந்து நின்றது..

காமாட்சி இல்லத்துக்கு வந்து ஆறு வருசம் ஆச்சு...

அவ்வப்போது தங்கமணியும் அவளது கணவன் குமரேசனும் பார்க்க வருவார்கள்... பழங்கள் பலகாரங்கள் என்று கொண்டு வருவார்கள்..

தீபாவளி பொங்கல் என்று விசேச நாட்களில் வருந்தி அழைத்தாலும் கூட காமாட்சி இல்லத்தை விட்டு வெளியே வருவதில்லை...

இருந்தாலும் சேலை ரவிக்கை துண்டு போர்வை..ன்னு புதுசா வாங்கிக் கொடுத்துட்டு கால்..ல விழுந்து கும்பிட்டு விட்டுச் செல்வார்கள்...

அக்காவுக்கு இத்தனை வைராக்கியம் இருந்தாலும் மனசு மட்டும் பூ மாதிரி...

எல்லா நாளும் இங்கே மற்றவர்களுடன் " உனக்கு நான் துணை.. எனக்கு நீ துணை!.. " - என்று இருந்து விட்டு நல்ல நாள் பெரிய

நாள் என்றால் மட்டும் சொந்தங்களத் தேடிப் போவது என்பதை விரும்புவதில்லை...

அந்த அளவுக்கு இரக்கப்படும் மனசு தங்கமணி வீட்டுக்குப் போவது என்பதை மட்டும் ஓரங்கட்டி வைப்பது ஏன் என்பது புரியாத புதிர்...

" எனக்காவது நீங்க இருக்கீங்க!... ஆதரவு.. ன்னு யாருமே இல்லாத பெரியவங்களும்.. வயசுக்கு வந்த புள்ளைங்களும் இங்கே இருக்காங்க... அவுங்க மனசெல்லாம் ஏங்கிடக்கூடாது தங்கமணி!... " - என்று புன்னகைத்துக் கொள்வார்... அவ்வளவுதான்...

அத்தகைய அக்கா இதோ அருகில்!...

மேலெல்லாம் நறுமணம்...

ஆதரவு இல்லத்தின் உள்ளேயே சிறு சிறு தொழிற் பிரிவுகள்... அக்கா அதில் வாசனைத் திரவியங்கள் தூபப் பொடிகள் தயாரிக்கும் பிரிவில்
வேலை செய்கிறார்கள் போல இருக்கின்றது...

" அக்கா!... " - தழுதழுத்தபடி எழுந்தாள் தங்கமணி...

" தங்கம்... நல்லாயிருக்கிறியா... குமரேசன் சௌக்கியமா... பவானி எப்படி இருக்கிறா?... " - என்றபடி முகத்தைத் துடைத்துக் கொள்வதாக கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் அக்கா...

" எல்லாரும் நல்லா இருக்கோம்... நீங்க எப்படி இருக்கீங்க?... வர்ற மாசி பதினாலு பவானிக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கோம்... மாப்பிள்ளை பெரிய மார்க்கெட்..ல காய்கறிக் கடை வச்சிருக்கார்.. உங்க கொழுந்தனார் நேர்ல வந்து உங்களுக்கு பத்திரிக்கை வைக்கணும்..ன்னு இருந்தாங்க... "

" தை கடைசி வெள்ளி... குத்து விளக்கு பூஜை..ன்னு மதுர..யில இருந்து ஆயிரத்தெட்டு குத்து விளக்குக்கு ஆர்டர் வந்ததும் அண்ணாச்சி இவங்களையே டெலிவரி கொடுக்கச் சொல்லி லாரியோட அனுப்பி வச்சிட்டாங்க... முதலாளி பேச்சை மீற முடியுமா... "

" அவங்களை அந்தப் பக்கம் அனுப்பி வச்சிட்டு நான் இங்கே கிளம்பி வந்திருக்கேன்... நேத்து தான் ஐயனாரு கோயிலுக்கும் முனீஸ்வரன் கோயிலுக்கும் பாக்கு வச்சோம்... உறவு முறையில உங்களுக்குத் தான் முதல் தாம்பூலம்!... ".

கையுடன் கொண்டு வந்திருந்த பையிலிருந்த பித்தளைத் தட்டை எடுத்து கல்யாண அழைப்பிதழுடன் தாம்பூலமும் பதினொரு ரூபாயும் வைத்து பணிவுடன் நீட்டினாள் தங்கமணி...

" தனிக்கட்டை... எனக்கெதுக்கு இந்த மரியாதை எல்லாம்?.. " - என்றபடி அழைப்பிதழையும் தாம்பூலத்தையும் எடுத்துக் கொண்டு பணத்தை தங்கமணியிடமே திருப்பிக் கொடுத்தார் அக்கா...

" பவானி பெரிவளான சடங்குக்கும் நீங்க வரலை.. இப்போ நீங்க வந்தே தீரணும்...ன்னு பவானி ஒத்தக் கால்ல.. நிக்கிறா... பெரிய மனசு பண்ணனும்நீங்க!.. " - என்றபடி கும்பிட்டாள் தங்கமணி...

" இங்கே வந்து சேர்ந்துக்கணும்..ன்னு நீங்களா விருப்பபட்டீங்க... அந்த நேரத்துல உங்களத் தடுத்து ஆதரவு பண்ண எங்களுக்கும் முடியவில்லை... இதெல்லாம் ஏதோ கிரக கோளாறு தான்... எதையும் பெருசா எடுத்துக்காம பவானி கல்யாணத்துக்கு நீங்க அவசியம் வந்து புள்ளைங்களுக்கு திருநீறு பூசி விடணும்... "

தங்கமணியின் கண்களில் நீர் வழிந்தது...

" அடடா... என்னது?... தங்கம்!..." - அக்காவிடம் அதிர்ச்சி...

"உங்களை நீங்களே ஏங்..க்கா வருத்திக்கிறீங்க?... அடுத்தவங்க சந்தோஷம்.. அடுத்தவங்க சந்தோஷம்.. ந்னு ஆசைப்படுறது தான்

உங்களோட சந்தோஷமா?.. "

" அது கற்பூரமாக் கரைஞ்சுதான் நாப்பது வருசமாச்சே தங்கம்!.. நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே.... நான் பவானி கல்யாணத்துக்கு கண்டிப்பா வர்றேன்... கல்யாணத்துக்கு மூணு நாளைக்கு முன்னால இங்கே வந்து மனு எழுதிக் கொடு.. அனுப்பி வைப்பாங்க... "

" அக்கா... " - என்று கட்டிக் கொண்டாள் தங்கமணி...

" அப்புறம் இன்னொரு சேதி... "

" சொல்லுங்க அக்கா?... "

" இங்கே வயசானவங்களும் வயசுப் பிள்ளைங்களுமா நாப்பத்தைஞ்சு பேர் இருக்கிறோம்.... கல்யாணத்துக்கு அப்புறம் ஒருநாள் வந்து எல்லாருக்கும் மத்தியான சாப்பாடு செய்யணும்... ஏழைங்க மனசு நெறைஞ்சா எல்லாம் நல்லபடியா நடக்கும்!... "

" அப்படியே செய்றேங்..க்கா!.. " - தங்கமணியின் கண்களில் மகிழ்ச்சி வெள்ளம்..

" சரி ... நீ பொழுதோட கிளம்பு... இதை கைச்செலவுக்கு வச்சுக்க!... "

- என்றபடி இடுப்பிலிருந்த சுருக்குப் பையிலிருந்து பணச்சுருளை வெளியில் எடுத்தாள்...

" இதெல்லாம் வேணாங்..கா!.. " சட்டென மறுத்தாள் தங்கமணி...

" இது இங்கே வேலை செய்றதுக்காக அவுங்க கொடுத்திருக்கிற சம்பளம்... நான் வச்சுக்கிட்டு என்ன செய்யப் போறேன்... "

" இருக்கட்டுங்..க்கா!.. இந்தப் பணத்தை இங்கே இருக்கிற வயசுப் புள்ளைங்க தேவைக்கு ஆகட்டும்..ன்னு இங்கேயே கொடுத்துடுங்க அக்கா!... "

" தங்கம்... அஞ்சாறு வருசமா எனக்குக் கிடைச்ச சம்பளத்தையெல்லாம் மூணு பங்கா பிரிச்சு புள்ளைங்க படிப்புச்

செலவுக்கும் வயசானவங்க வைத்திய செலவுக்கும்.. ன்னு கொடுத்துக்கிட்டு தான் இருக்கேன்... இது பவானிக்கு..ன்னு நான் சேர்த்து வைச்சது... "

" எம் மனசுல பட்டதை நான் சொல்றேன்... இந்தப் பணத்தையும் அவுங்களுக்கே கொடுத்துடுங்க... புண்ணியத்தோட புண்ணியமா இருக்கும்!... "

" உங்களக் காரணப் பிறவி.. ன்னும் உங்களோட அறுபதாவது வயசுல தான் பிரிஞ்சு போன மாமா திரும்பி வருவார்..ன்னும் சாமக் கோடாங்கி வாக்கு சொன்னதா சொன்னாங்களே... "

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்ட தங்கமணி தொடர்ந்தாள்...

" அது சாமி சத்தியமா நடந்தே தீரும்!... "

" அந்தப் பெரிய வீடும் கடையும் வாடகைக்கு விட்டு அதை அப்படியே பேங்குல போட்டு வச்சிருக்கோம்... நல்ல காலம் திரும்பி வந்ததும் மாமாவும் நீங்களும் இந்த மாதிரி தர்மம் பண்ண மாட்டீங்களா!... அப்பனும் ஆத்தாளுமா நாலு பேருக்கு ஆதரவு காட்ட மாட்டீங்களா!... "

மீண்டும் விம்மி அழுதாள் தங்கமணி...

" என் ராசாத்தி!... "

கண்ணீர் வழிய தங்கமணியைத் தழுவிக் கொண்டாள் அக்கா...

*****

அதே நேரத்தில் மேலெல்லாம் நீர் வழிய கங்கை நதிக்குள்ளிருந்து எழுந்தது ஒரு ஆத்மா..

தோளில் புரண்டு கிடந்த ஜடாமுடியை உதறிவிட்டு முடிந்து கொண்டது..

'ஹரஹர மகாதேவ்!..' என்றபடி விபூதியை அள்ளிப் பூசிக் கொண்டு நீருக்கு மேலே ஏழாவது படிக்கட்டில்

**அமர்ந்திருந்த அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டது...**

**அந்தக் குழந்தை சில வருடங்களுக்கு முன் இயற்கைச் சீற்றத்தில் பெற்றோரை இழந்து நிற்க - காலம் தன் கருணையை இந்த ஆத்மாவின் மூலமாகக் காட்டியது...**

**அந்தக் கருணை மேலும் கனிந்து நின்றதனால் இளங்குழந்தைக்கு இனிமேல் ஒரு தாய் வேண்டுமே என்ற ஆதங்கம் மேலிட அன்பு மகளைத் தோளில் அணைத்துக் கொண்டு கூட்டத்துள் கலந்து தென் திசைக் காவிரியை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தது..**

**============**



# மிமிக்ரி ஆர்டிஸ்டுகளுக்கும், நடிகர்களுக்கும் என்ன வித்தியாசம்?

நெல்லைத்தமிழன் :

பாடும் பாடலை மிகவும் கண்ணைமூடி ரசிக்கலாம், பாடுபவரைப் பார்த்தால் ஐயோ..வலிப்பு வந்துவிட்டதோ, கையில் பாரிச வியாதி வந்துவிட்டதோ, என்ன! தோசைக்கு மாவரைக்கும் நேரத்தில் வந்துவிட்டோமோ? வாய்க்குள் தேள் ஏதேனும் போய்விட்டதோ....வாய் ஏன் கர்ணகடூரமாக இருக்கு, நேற்று சாப்பிட்டது ஜீரணமாகாமல் கேஸ்ட்ரிக் டிரபிளில் கொண்டுவந்துவிட்டுவிட்டதா என்றெல்லாம் நம்மை யோசிக்க வைக்கும் கர்னாடிக் பாடகர்கள்/பாடகிகள் உங்களுக்குத் தெரிந்து யார் யார்?

$ பாடுவதை ரசிக்கும் போது பாடகரின் சேஷ்டைகளோ முக பாவங்களோ எனக்குத் தெரிவதில்லை. கண் திறந்திருந்தாலும் காதுகளுக்கு auxiliary sensor களாகவே செயல்படுகின்றன.

# வடையைத் தின்னக் கொடுத்தால் துளையை எண்ணக்கூடாது. இசையை வழங்குபவரது ரசனைக் கேற்ப அவரது உடல் வளைகிறது. அல்லது இசை அவர் உடலை அப்படி இயக்குகிறது. சேற்றைப் பார்க்காமல், செந்தாமரையை ரசிக்கக் கற்றுக் கொள்வோம்.

& பாகவதர் : " என்ன சார்! நேற்று நான் அயோத்யா மண்டபத்தில் பாடிய கச்சேரிக்கு நீங்க வரவே இல்லையே. ரொம்பக் கஷ்டப்பட்டு, பிரமாதமாகப் பாடினேன்."

ரசிகர் : " ஓ அப்படியா ! வந்தவர்களும் கஷ்டப்பட்டுக்

கேட்டிருப்பாங்க! "

நிற்க. நான் கச்சேரிகளுக்குச் சென்றால், பாட்டு, பக்கவாத்தியம், தனியாவர்த்தனம் இவைகளோடு பாடகரின் அங்க சேஷ்டைகளையும் இரசிப்பேன். எல்லாவற்றிலும் ரசனையை வளர்த்துக்கொண்டோம் என்றால், அப்புறம் என்ன கவலை!

பானுமதி வெங்கடேஸ்வரன் :

1. மரக்கறி உணவு உண்பவர்களை விட அசைவம் சாப்பிடுகிறவர்கள் அதிகமாக செல்லப் பிராணி வளர்ப்பவர்களாக இருகிறார்களே எப்படி இந்த முரண்பாடு?

$ இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அனுபவம் பற்றாது! நான் மரக்கறி+ செல்லப் பிராணி.

# தாமரையை பூஜையிலும், ரோஜாவை மாலையாகவும், மல்லிகையை தலையில் சூடவும் பழகிய நாம் கத்தரிக்காயை எண்ணெய் சட்டியில் வதக்குவது போலதான்.

& கேள்வி வித்தியாசமான கோணத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இந்தக் கோணம் சரியா தவறா என்று கேட்காமல், யோசித்துப் பார்த்தேன். இந்த முரண்பாடு பொதுவானது அல்ல.
அசைவப் பிரியர்களில், செல்லப்பிராணிகளை வளர்ப்பது பிடிக்காதவர்களும் இருக்கலாம். சைவ உணவு சாப்பிடுபவர்களில், (என்னைப்போன்று) செல்லப்பிராணிகள் வளர்ப்பு என்றாலே 'வேண்டாத விவகாரம்' என்று ஒதுங்கிச் செல்பவர்களும் இருக்கலாம்.
வாழ்க்கையில் அதிக மன இறுக்கங்களுக்கு ஆளானவர்கள், செல்லப்பிராணிகள் வளர்த்தால், அந்த நிலை, அவர்களின் மன இறுக்கத்தைப் போக்கும் என்று சொல்கிறார்கள்.
பொதுவாக, சிறிய வயதில், நாய்/பூனை வளர்க்க ஆசைப்படாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். ஆனால், பெரிய வயதில், அதுவும் தனக்கென குடும்பம், குழந்தை குட்டி என்று வந்தபின், செல்லப்பிராணிகள் வளர்க்கிறேன் என்று சொல்பவர்களுக்கு ....

நான் குடியிருக்கின்ற குடியிருப்பிலும் சரி, முன்பு வாக்கிங் செய்த பார்க்கிலும் சரி, நாயோடு வாக்கிங் வரும் செ.பி வளர்ப்பாளர்கள் (Dog walkers தவிர்த்து) எல்லோருடைய முகத்திலும் நான் ஓர் இறுக்கத்தைத்தான் பார்த்திருக்கிறேன் / பார்க்கிறேன்.

2. ஆங்கிலத்தில் நேரத்தை குறிப்பிடும் பொழுது 6'O'clock,7'O' clock... என்கிறோமே, அந்த ஓ என்பது எதைக்குறிக்கிறது?

$ 7 On clock 7 O'clock ஆயிற்று என்பர். O பூஜ்யத்தைக் குறிப்பதாகவும் சொல்வர்.சரியாக 7 மணிக்கு 7-00 என்பதாக.

& " 7 of the clock " என்பதைத்தான், apocopic form ல 7 O' clock என்று சொல்கிறார்கள் என்றும் ஒரு கருத்து உண்டு. சிறிய வயதில் நான், 7 O' clock என்றால், (ஆங்கிலத்தில்) ப்ளேடு என்று அர்த்தம் என்றுதான் நினைத்திருந்தேன்.

3. மிமிக்ரி ஆர்டிஸ்டுகளுக்கும், நடிகர்களுக்கும் என்ன வித்தியாசம்?

$ மிமிக்ரிக்கு குரல்
நடிகருக்கு லுக்கு.

# பிரபலங்களை வைத்து மிமிக்ரி நடக்கிறது. இவர் அவரைச் சார்ந்து பிழைக்கிறார். அவர் இவரைப் பார்ப்பது கூட அபூர்வம்.

& நடிகர்கள், திறமை வாய்ந்தவர்கள். மிமிக்ரி கலைஞர்கள், எல்லா நடிகர்களின் திறமையும் ஒருங்கே வாய்ந்தவர்கள். ஒரே மி. க விடம் பல நடிகர்களைக் கண்டு / கேட்டு ரசிக்கலாம். ஆனால் ----- பலதரப்பட்ட நடிகர்கள் இல்லை என்றால், மி க வுக்கு வேலை இல்லாமல் போய்விடும்.

=============

## வாசகர்கள் அனுப்பிய தகவல்கள் :

# 1

http://kurungudi-valli.blogspot.com/

அன்புள்ள நண்பர்களுக்கு, இந்தப் பழைய வலைப்பூவில்

எனக்குப் பிடித்த திரை இசைப்பாடல்களை பதிந்து வருகிறேன்.

இனிமேல்தான் நன்றாக வகைப் படுத்த வேண்டும்.

லேஅவுட் எல்லாம் அமைக்க வேண்டும். நான் அனுப்பாமலேயே எங்கள் ப்ளாகில் ஒரு பாடல் வந்து விட்டது . ஒரு விளக்கமாக இதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மிக மிக நன்றி.

வல்லிசிம்ஹன்

--

அன்புடன்,

ரேவதி.நரசிம்ஹன்

# 2

# அனைவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப

## "Sowmya's Kitchen"

# யூ டியூப் சேனல் துவங்கப்பட்டுள்ளது.

**Please like share and subscribe . thank you all.**

**L Karthik.**

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

" ஹலோ ஏ ஜி அங்கிள் " என்று உற்சாகமாக அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தாள் எதிர் வீட்டு அங்கிதா, பத்தாம் வகுப்பு மாணவி.

" ஹலோ! வெல்கம். லாக் டவுன் காலத்தில் அரட்டை அடிக்க யாரையுமே காணவில்லையே என்று நினைத்தேன்"

" ஆமாம் அங்கிள், ஆரம்பத்தில் பள்ளிக்கூடம் எல்லாம் லீவு என்று கேட்டவுடன் சந்தோஷமா இருந்தது. போகப்போக இப்படி தனியாக வீட்டில் இருந்துகொண்டு டீச்சர் நடத்தும் ஆன் லைன் பாடங்கள் பார்ப்பது கேட்பது ஒரு மாதிரியாக போர் அடிக்க ஆரம்பிச்சுடுச்சு"

" சரியாகச் சொன்னாய் அங்கிதா " என்று சொல்லியவாறு உள்ளே நுழைந்தான் அடுத்த வீட்டு அருண், காலேஜ் முதல் ஆண்டு மாணவன்.

" ஏய் ! நீ எப்பவும் என் பின்னாடியே வர்றே? என்னைப் பார்க்கத்தானே வந்தே?"

" ஆமாம் - நீ பெரிய கிளியோபாட்ரா ! உன்னைப் பார்க்கத்தான் ஆளுங்க கியூவில் நிற்கிறார்களாக்கும்! இங்கே வித்யா ஆண்ட்டி செய்கிற பஜ்ஜி வாசனை எங்க வீட்டுப் பக்கம் வர ஆரம்பித்த உடனேயே ஏ ஜி அங்கிளைப் பார்க்க வரவேண்டும் என்று கிளம்பி வந்தேன்"

" அதானே பார்த்தேன்! காலையில் வித்யா ஆண்ட்டி பூஜை செய்து கற்பூரம் காட்டுவார்களே, அப்போ அந்த வாசனை உன் வீட்டுப்பக்கம் வராதா?"

" அது நான் தூங்குகிற டைம் - அப்போ எந்த வாசனையும் எனக்கு உணரமுடியாது."

" நீ முழிச்சுகிட்டு இருந்தா கூட உனக்கு கற்பூர வாசனை தெரியாது"

இவர்களின் உரையாடல்களை ரசித்தபடியே, அறிவு ஜீவி என்னும் ஏ ஜி - தன் கையில் இருந்த புத்தகத்தை, ஒரு அடையாள அட்டை சொருகி, மேஜை மீது வைத்தார்.

" அங்கிள் - அது என்ன புத்தகம் " என்று கேட்டான், அருண்.

" மனிதம் பற்றிய உளவியல் தகவல்கள் " என்றார் ஏஜி.

அங்கிதா : " அட! அப்படியா ! எங்களுக்கும் சொல்லுங்க அங்கிள்!"

" சொல்கிறேன். முதல் பாயிண்ட், " ஏழாண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் நட்பு வாழ்நாள் முழுதும் நீடிக்குமாம் "

அருண் விரல்விட்டு எதையோ எண்ணுகிறான்.

அங்கிதா : " ஏய் - நீ எதையும் எண்ணிப்பார்க்காதே ! நீ எனக்கு friend இல்லை, அப்பப்போ எனிமி. அடுத்த தகவல் என்ன அங்கிள்?"

ஏ ஜி : " அடிக்கடி ஒருவர் நினைவு வந்து கொண்டிருந்தால் அவரும் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறாராம்"

அருண் : " ஹி ஹி - அங்கிள் இதுக்கு சான்சே இல்லை. எனக்குத் தெரிந்த ஒருவருக்கு எப்போதும் அனுஷ்கா நினைவு வந்துகொண்டே இருக்கும். ஆனா அனுஷ்கா இவரை எப்படி நினைத்துக் கொண்டிருக்க முடியும்!

அனுஷ்கா எங்கள் ப்ளாக், மின்நிலா எல்லாம் படிக்கமாட்டாரே!"

அங்கிதா : " அதை அனுஷ்கா சொல்லட்டும். நீ ஏன் சொல்றே! அங்கிள் அடுத்த தகவல் ப்ளீஸ் "

ஏ ஜி : " எல்லாவற்றுக்கும் எரிச்சல் படுகிறீர்கள் என்றால் யாரையோ 'மிஸ்' பண்றீங்களாம் "

அங்கிதா : " நான் எதற்கும் எரிச்சல் படுவதில்லை so, யாரையும் மிஸ் பண்ணவில்லை "

அருண் : " நானும் எதற்கும் எரிச்சல் படுவதில்லை. யாரையும் 'மிஸஸ்' பண்ணமாட்டேன் "

அங்கிதா : " வெவ்வெவ்வே ... சரி ஏ ஜி அங்கிள் .... இன்னும் ஒரு தகவல்? "

ஏ ஜி : "குழுவாக அமர்ந்திருக்கையில், யாராவது ஜோக் சொன்னால் வாய்விட்டு சிரித்துக்கொண்டே யாரைப் பார்க்கிறீர்களோ, அவர்தான் உங்களுக்கு ரொம்ப பிடித்தவராவர்."

அருண் வாய்விட்டு சிரித்தவாறு அங்கிதாவைப் பார்த்தான்.

அங்கிதா : " ஐயே லூசு ! இப்போ யாரும் ஜோக் சொல்லவில்லையே! சிரிக்கிறதைப் பாரு சிம்பன்சியாட்டம்!"

வித்யா ஒரு தட்டு நிறைய பஜ்ஜிகளைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்து, தானும் அமர்ந்துகொண்டாள். எல்லோரும் ஆளுக்கு ஒரு பஜ்ஜியை தேர்ந்தெடுத்து சாப்பிடத்தொடங்கினர்.



வித்யா : " என்ன சப்ஜெக்ட் ஓடிகிட்டு இருக்கு இன்றைக்கு?"

அங்கிதா : " ஆண்ட்டி, அங்கிள் மனிதம் என்ற தலைப்பில் சில பாயிண்டுகள் படித்தாராம். அது பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார்."

அருண் தட்டில் இருந்த பஜ்ஜிகளில் வட்ட வடிவ பஜ்ஜிகளை மட்டும் செலெக்ட் செய்துகொண்டிருந்தான்.

அங்கிதா : " ஏய் - பரிட்சைகளில்தான் zero வாங்குகிறாயே, இங்கேயும் ஏன் zero shape பஜ்ஜிகளைத் தேடி எடுக்கிறாய்? "

அருண் : " zero வடிவ பஜ்ஜிகள் ஒன்று கத்தரிக்காய் அல்லது வெங்காய பஜ்ஜியாக இருக்கும். அவைகள்தான் எனக்குப் பிடிக்கும்"

அங்கிதா : " சரியான தின்னிப் பண்டாரம்!"

வித்யா : " மொத்தம் எத்தனை தகவல்கள் சொல்லப்போறீங்க? "

ஏ ஜி : " இப்போதைக்கு மொத்தம் பதினெட்டு"

வித்யா : "அப்போ இன்னும் ஒரு தகவல் சொல்லிவிட்டு மீதியை அடுத்தடுத்த வாரங்களுக்கு ஒத்திப்போடுங்க"

ஏ ஜி : " அதுவும் சரிதான். பஜ்ஜிகளை ரசித்துச் சாப்பிட வேண்டும் அல்லவா ! ஐந்தாவது தகவல் - நாளொன்றுக்கு நான்கைந்து பாடல்களையாவது கேட்பவர்களுக்கு நினைவாற்றல் கூடும், நோய் எதிர்ப்பு சக்தி வளருமாம், மன அழுத்தத்துக்கான வாய்ப்பு 80 சதவீதம் குறையுமாம். "


வித்யா : " இது நல்லா இருக்கு ! நவராத்திரி சமயத்தில், நம் வீட்டுக்கு கொலுவிற்கு வருபவர்களை பாடச் சொல்லி கேட்பதின் தாத்பர்யம் இதுதான் போலிருக்கு. இது சரி என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

அருண் : " ஆமாம் ஆண்ட்டி - பாடுவோர் பாடினால் ஆடத் தோன்றும் என்று ஆலங்குடி சோமு சாஹித்யம் கூட ஒன்று இருக்குதே !"

" ஏய் நீ பாடாதே ! நீ பாடினால் எனக்கு ஓடத்தோன்றும்! " என்று சொல்லியவாறே எழுந்து ஓடினாள் அங்கிதா.

சிரித்தவாறே இன்னும் இரண்டு வட்ட வடிவ பஜ்ஜிகளைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்தான் அருண்.

(தொடரும்)



# ஒரு கிடார் தேய்ந்து புல்லாங்குழல் ஆகிறது..

**ஆ... கிடாரா? எப்படி?**

**பிரபு கிறிஸ்துவப் பையன் என்பது அப்போது தெரிந்தது. வாரா வாரம் சர்ச் கொயரில் இவன் இன்ஸ்ட்ருமென்ட் வாசிப்பதோடு, அவற்றை எல்லாம் மெயின்டெயின் செய்வதும் அவன்தான் என்பதும் தெரிந்தது.**

**கிடாரை அவன் வைத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்து கொண்டு அதில் எதையோ அவன் வாசித்தது எந்த விதமான ஸ்டைலையும் காட்டவில்லை. அவனும் பாலாவும் பேசிக்கொண்டே இருக்க, நான் மௌனமானேன்.**



**பிராக்டிஸ் செய்வது போல வாசித்து முடித்து என்னைப் பார்த்து பிரபு எனக்காக அப்போது பிரபலமாயிருந்த ஏதோ ஒரு பாடலை இசைத்துக் காட்டி என்னைப் பார்த்துச் சிரித்தான்.**

**என்னையும் அறியாமல் பாலாவிடம் கேட்டேன். "நீயும் வாராவாரம் கோவில்ல ஏதாவது வாசிப்பியா?" பாலா மறுபடியும் சிரித்து, "எனக்குத் தெரியாது.. நான் இவன் கூட அவங்க**

கோவிலுக்குப் போவேன்.. அவ்வளவுதான்" என்றான் என் மறைமுகக்கேள்விக்கான பதிலை மறைமுகமாகவே கொடுத்தான்.

அவர்கள் இருவரும் அருமையான நண்பர்கள். அவர்களுக்குள்ளும் சரி, என்னுடன் பழகிய வகையிலும் சரி.



பிரபு கிடார் மட்டுமல்லாது அகார்டினும் வாசிப்பான் என்று பாலா சொன்னான். நான் அப்போது அகார்டினை அறிந்ததில்லை. பியானோ போல இருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். அப்புறம் அதையும் அவன் காட்டியபோது பிரபுவின் மேல் எனக்கு மதிப்பு உயர்ந்தது.

கோவிலுக்கு வரும் ஒரு பெண்ணை பிரபு விரும்பினான். அந்தப் பெண் கொயரில் பாடுபவளும் கூட. அவளிடம் சொல்ல முடியாமல் தவிக்கும் தன் காதலைப் பற்றி அவ்வப்போது என்னிடமும் அடிக்கடி பாலாவிடமும் பேசுவான்.



அவன் விரும்பும் பெண் என் தங்கையின் தோழிக்குப் பக்கத்து வீட்டுப்பெண் என்பது பின்னர் தெரிந்தது. ஆனாலும் கூட அவன் எந்த வகையிலும் என் உதவியை நாடவில்லை. ஒருமுறை என் தங்கை அந்தப் பெண் பற்றிக் கேட்டபோது வெட்கத்துடன் சிரித்தான். "அவங்களுக்கு என் அன்பு தெரியல சிஸ்டர்..." என்பான். "இதெல்லாம் ஏன் தோஸ்த்து அவங்க கிட்ட சொல்றீங்க... என்னைப்பத்தி என்ன நினைப்பாங்க" என்றான் என்னிடம்.

பிரபுவின் வீட்டில் அந்தக் கிடாரை நான் கையாள நினைத்தபோதுதான் அதற்கு எவ்வளவு பயிற்சி தேவை என்பது புரிந்தது. சில நாட்களுக்குப் பின் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டேன். ஒரே ஒரு ஆசை. ஒருநாள் கேமிராவோடு வந்து அந்தக் கிடாரைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டும்!

அதைக்கூட பிரபுவிடம் சொல்லி இருந்தால் அவனிடமே கேமிரா கூட இருந்திருக்கக் கூடும். அவன் திறமைக்கு முன்னே என் இந்த பொய்யான புகைப்பட ஆசையைச் சொல்ல தயக்கம் வந்திருக்கவேண்டும் எனக்கு!

அவனோடு ஓரிருமுறை சர்ச்சுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் அவன் வாசித்ததைப் பார்த்ததில்லை. சாதாரண சமயங்களில் சென்று வந்திருக்கிறேன்.

அவனால் எனக்கு ஒரு உதவி நடந்தது. மிகவும் ஆச்சரியகரமான உதவி.

என் தங்கை ப்ளஸ் டூவில் சேர விண்ணப்பித்திருந்த பள்ளி மிகவும் பிரபலமான பள்ளி. அங்கு இடம் கிடைப்பது மிகவும் கஷ்டம். என் அப்பா ஒருமுறை முயற்சித்து விட்டு கைவிட்டு விட்டார். அவரின் உயர் அதிகாரியே தினமும் அந்தப் பள்ளிக்கு, தன் மகளுக்கு அட்மிஷன் வேண்டி அலைந்து கொண்டிருந்ததைப் பார்த்து அதை எங்களிடமும் சொல்லி, வேறு பள்ளி முயற்சிக்கலாம் என்றார்.

அவர்கள் எங்களால் கொடுக்க முடியாத அளவு டொனேஷன் கேட்டார்களா நினைவில்லை. யதேச்சையாக பிரபுவிடம் இதுபற்றிச் சொன்னபோது, "பூ... அந்த ஸ்கூல்ல தங்கிச்சிக்கு அட்மிஷன் வேணுமா? முன்னாடியே சொல்ல மாட்டியா தோஸ்த்து..." என்றான்.

எப்படி என்று கேட்டதும் சில நடைமுறைகளை சொன்னான். அவன் தந்தைக்கு அந்தப் பள்ளியில் இருக்கும் சொ(செ)ல்வாக்கு பற்றிச் சொன்னான். இதை என் வீட்டிலும் சொல்லி, தங்கைக்கு அட்மிஷன் வாங்கித்தர நானாயிற்று என்றேன். அப்பா கேலியாகப் புன்னகைத்தார்.

ஒருநாள் அவன் சொன்னபடி தங்கையை அழைத்துக்கொண்டு நான் பள்ளி செல்ல,. இவன் பெரிய மனுஷன் மாதிரி, எங்களை அங்குக் காத்திருக்கச் சொல்லிவிட்டு முதல்வர் அறைக்குள் சென்று வந்தான். வெளியே வந்தவன் வேறு வேலையாகக் கிளம்பி விட்டான். "அவர்கள் கூப்பிடும்போது உள்ளே போய்ப்பார்... என்ன சொன்னாலும் சரி என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போயிடுங்க" என்று சொல்லி விட்டுப் போனான்.

அதே போல என் தங்கையை மட்டும் உள்ளே நேர்முகத்தேர்வுக்கு அழைத்துப் பேசினார் முதல்வரும் இன்னொருவரும். வெளியே என் அப்பா சொன்ன அந்த அவரின் உயர் அதிகாரி சாதாரண மனிதராய் மரத்தடியில் தரையில் அமர்ந்திருந்தார். எனக்கும் அவரைத்தெரியும், அவருக்கும் என்னைத்தெரியும் என்பதால் சும்மா பேசிக்கொண்டிருந்தோம். நான் வந்திருக்கும் காரணம் அறிந்து சற்றே வியப்படைந்தது மாதிரித் தெரிந்தது.

நேர்முகப்பேச்சில் பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை என்றும், இவள் நல்ல மதிப்பெண் எடுத்திருந்தால் திருப்தி அடைந்தாலும், இவள் கேட்ட பிரிவு தர முடியாது என்றும் வேறு பிரிவு தருவதாகவும் சொன்னதாக தங்கை சொன்னாள்.

நாங்கள் வீட்டுக்கு வந்து கொஞ்ச நாட்கள் ஆகியும் முடிவு எதுவும் தெரியவில்லை. அப்பா முணுமுணுத்தார், திட்டினார். 'இவன்லாம்

ஒரு பெரிய மனுஷன், இவனுக்கு ஒரு பிரெண்டு... அவன் சொல்லி அட்மிஷன் கிடைக்குமாம்...' என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

நானும் பிரபுவிடம் கேட்டுக்கொண்டே இருந்தேன். அவன் பொறுமையாய் இருக்கச் சொன்னான். பிறகு ஒருநாள் பாலா வந்து என்னை அழைத்துப்போனான். பள்ளியில் பிரபு காத்திருந்தான். அப்போதுதான் அவன் தந்தை வந்து செல்வதாகச் சொல்லி அங்கு சென்று கொண்டிருந்த மனிதரைக் காட்டினான். இத்தனை நாட்கள் அவன் வீட்டுக்குச் சென்றிருந்தும் நான் அவன் அப்பாவைப் பார்த்ததில்லை. இப்போதும் அவர் முதுகை மட்டுமே பார்க்க முடிந்தது.

பள்ளியில் அலுவலகத்தில் அழைத்து, அட்மிஷன் சீட்டையும் தேவைப்பட்டியல் விவரங்களையும் கையில் கொடுத்து மறுநாள் தங்கையை வகுப்புக்கு வரச் சொன்னார்கள். கட்டணம் ஒரு வாரத்துக்குள் கட்டிக்கொள்ளலாம் என்றார்கள்.

நோ டொனேஷன்! என் தங்கை விரும்பிய பிரிவே கொடுக்கப் பட்டிருந்தது! என் மனதில் பிரபுவின் மதிப்பு உயர்ந்தது. எங்கள் வீட்டிலும் ஆச்சர்யம்.

திரும்ப வரும்போது இன்னமும் மரத்தடியில் அந்த உயர் அதிகாரி ஒரு பேப்பர் துண்டை வாயில் கடித்தபடி காத்திருந்தார்! பின்னர் இரண்டு மாதங்கள் கழித்து அவர் பெண்ணுக்கும் அங்கு அட்மிஷன் கிடைத்து விட்டது வேறு விஷயம்!

வேலைக்குச் செல்ல ஆரம்பித்த பிறகு இந்த நண்பர்களுடனான தொடர்பு மெல்ல மெல்ல தூரம் அதிகமாகி, அப்புறம் நானும் வெளியூர் வந்து விட்டேன்.

ஆமாம், கிடார் என்று ஆரம்பித்து கதை எங்கோ செல்கிறதே... கிடார் என்று ஆரம்பித்தாலும் என் இரு நண்பர்களை நினைவுகூரும் வகையில் அமைந்து விட்டது இந்த மினி தொடர்! கிடார்? அந்த ஆசை நிறைவேறவே இல்லைங்க... அதற்குப் பதிலாக புல்லாங்குழல் வாசிப்பது போல பின்னாட்களில் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டேன். எனக்கு புல்லாங்குழலும் வாசிக்கத்தெரியாது!

**கொஞ்ச காலத்துக்கு முன் பேஸ்புக்கில் பகிர்ந்தது...! முதல் பகுதி எங்கே என்று தெரியவில்லை!!**

**புதுமொழிகள் 2**

**கந்தலானால் கசக்கி எறி. கூழானால் போஸ்டர் ஒட்டு..**

**முற்பகல் போனால் பிற்பகலிலும் வராது. (கரண்ட்).**

**கற்க கசடற கற்பவை கற்றபின் விற்க அதற்குத் தக..**

**எந்தையும் தாயும் அலைபேசி இல்லாமல் இருந்ததும் இந்நாடே.....**

**திரைகடலோடியும் திரைப்படம் பாரு....**

**ஆண்டிராய்டின் அழகு ஆப்ஸில் தெரியும்...**

**அரசன் அன்று கொல்வான்.. ஆண்டிராய்ட் நின்று கொல்லும்..**

**அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்; ஆண்டிராய்ட் இல்லாதவன் நொந்து நூலாவான்.**

==============================

**இந்தப் பழைய கேள்விகளுக்கு விடை தெரியுமா? ஜீவி ஸாரோ, கோமதி அக்காவோ சொல்லக்கூடும். வல்லிம்மா கூட சொல்ல வாய்ப்பிருக்கிறது. இதற்கான விடையை மாலையோ, இரவோ இதன் கீழேயே வெளியிடுகிறேன்!**

பிரபலமான எழுத்தாளர்கள் நடத்திய ஏடுகள் அனேகம். அவற்றில் சில உங்களுக்கு...



# ஏடுகள் தெரிவதுண்டோ?

"இளஞ்சோழன்"

1. திரு ம. பொ. பெரியசாமி தூரன் அவர்கள் ஆசிரியராக இருந்து வெளிவந்த தமிழ்ப் பத்திரிகையின் பெயர் தெரியுமா?
2. முருகு சுப்பிரமணியனை ஆசிரியராகவும், பின்னர் திரு எ. அப்பாதுரை அவர்களை ஆசிரியராகக் கொண்டும் வெளிவந்த பத்திரிகையின் பெயர் தெரியுமா?
3. அமரர் வசந்தன் ஆசிரியராக இருந்து வெளிவந்த பத்திரிகை பெயர் தெரியுமா?
4. சித்தார்த்தன் என்பவர் ஆசிரியராக இருந்து வெளிவந்த பத்திரிகை பெயர் தெரியுமா?
5. எழுத்தாளர் எம். வி. வெங்கட்ராம் ஆசிரியராக இருந்து வெளிவந்த பத்திரிகை பெயர் என்ன?
6. பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகை எது?
7. எழுத்தாளர் விந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பத்திரிகையின் பெயர்?
8. மாஜினி என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பத்திரிகை எது?
9. திரு வாசவனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இரண்டு பத்திரிகைகளின் பெயர்கள் தெரியுமா?
10. காலஞ்சென்ற எச். டி. ராஜாவின் பொறுப்பில் [illegible] வெளிவந்த வாரப் பத்திரிகையின் பெயர் தெரியுமா?

## இதோ விடைகள்....!

விடைகள் :

1. காலச்சக்கரம்.
2. பொன்னி.
3. பாரிஜாதம்.
4. வாழ்க்கை.
5. தேனீ.
6. சிந்தனை.
7. மனிதன்.
8. தமிழன்.
9. சம்சாரம், துப்பறியும் கதை.
10. சுதந்திரம்.

## இவர் ஆசையும், அவர் கடுப்பும்!




"இன்னும் நூறு வருஷம் கழித்து, 'இதோ, இந்த வீட்டிலேதான் பிரபல எழுத்தாளர் சிவராமன் வாழ்ந்தார்' என்று என்னைப் பற்றி உலகம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படும் சார்....!"

"என்னிடம் இப்போதே வீட்டு வாடகையைத் தரா விட்டால் நாளைக்கே உலகம் அப்படிக் கூற ஆரம்பிக்கும்!"

**இவர் யார் என்று தெரிகிறதா? கோமதி அக்கா சட்டென சொல்லி விடக்கூடும்.**





# நாளும் பொழுதெல்லாம் உன்ன நினைக்கிறேன் தனியா படுத்துத்தான் சொகமா ரசிக்கிறேன்

1990 இல் வெளிவந்து காணாமல்போன படம் கவிதை பாடும் அலைகள். ராஜ்மோகன் ஜனனி நடிப்பில் வெளிவந்த படம். ஜனனி பின்னர் ஈஸ்வரி ராவ் என்கிற பெயரில் பிரபலமானார். பல தமிழ்ப்படங்களில் நடித்தார். காலாவிலும் ரஜினியின் மனைவியாக நடித்திருக்கிறார்.




இந்தப் படத்தின் பெரிய ப்ளஸ், ஒரே ப்ளஸ் இளையராஜாதான்! இதன் பாடல்களால்தான் இந்தப் படம் சிலரது நினைவில் இருக்கிறது! படத்தின் பாடல்களை எழுதி இருப்பவர் கங்கை அமரன். இயக்கம் டி கே போஸ்.




வானிலா தேனிலா எனும் மனோ -சித்ரா பாடிய பாடலும், அருண்மொழி -சித்ரா பாடிய உன்னைக் காணாமல் நானேது பாடலும், அப்புறம் இன்று மெயினாகப் பகிரப்போகும் கண்ணே என் கண்மணியே பாடலும் இந்தப் படத்தின் இனிய பாடல்கள்.



அருண்மொழி பாடிய பல பாடல்கள் இனிமையாக இருக்கும். டிராக் பாட வந்து பாடகர் ஆனவர் என்று

**நினைக்கிறேன். இளையராஜா இசையில் பல நல்ல பாடல்கள் கொடுத்திருக்கிறார்.**

**உன்னைக் காணாமல் நான் ஏது**
**உன்னை எண்ணாத நாள் ஏது**
**உன்னைக் காணாமல் நான் ஏது**
**உன்னை எண்ணாத நாள் ஏது**
**பூங்குயிலே பைந்தமிழே**
**என்னுயிரே நீ தான்**

**கம்பனின் பிள்ளை நான் காவியம் பாட வந்தேன்**
**காவிரிக் கரையெல்லாம் காலடி தேடி நின்றேன்**
**கவிஞனைத் தேடினேன் கவிதை கேட்க வந்தேன்**
**வானமும் பூமி எங்கும் பாடிடும் பாடல் கேட்கும்**
**ஜீவனை ஜீவன் சேரும் ஆயிரம் ஆண்டு காலம்**
**இனி எந்நாளும் பிரிவேது அன்பே**

**ஆயிரம் காலம்தான் வாழ்வது காதல் கீதம்**
**கண்ணனின் பாடலில் கேட்பது காதல் வேதம்**
**பிரிவினை ஏது இணைந்து பாடும் போது**
**காவியம் போன்ற காதல் பூமியை வென்று ஆளும்**
**காலங்கள் போன போதும்**
**வானத்தைப்போல வாழும்**
**இது மாறாது மறையாது அன்பே...**

**LINK** [https://youtu.be/yG-F9MDA0Ag](https://youtu.be/yG-F9MDA0Ag)

அடுத்து வரும் பாடல் எனக்கு மிகவும் பிடித்த பாடல்களில் ஒன்று. ஆரம்ப இசை முதல் மனோ குரல் வரை மிகவும் இனிமையான பாடல்களில் ஒன்று. ராஜ்மோகனுக்கு கதாநாயகனாய் நடிக்கும் ஆசை வந்ததால் எடுத்த படமோ, வருமானவரிக் கணக்குக்காக எடுத்த படமோ... நல்ல இரு பாடல்கள் வீணடிக்கப்பட்டிருக்கின்றன.



ஆடியோவும் சுமாராகத்தான் கேட்கிறது. எனினும் ரேடியோவில் கேட்கும்போது நன்றாகவே இருந்தது ஒலியின் தரம். வரிகளும் கூட இன்னும் சிரத்தை எடுத்து எழுதி இருக்கலாம் என்றும் தோன்றும்.

**கண்ணே என் கண்மணியே**
**என் கையில் வந்த பூந்தோட்டமே**
**பொன்னே என் பொன்மணியே**
**தினம் பொங்கிவரும் நீரோட்டமே**
**நீ கேட்கத்தானே நான் பாடினேன்**
**நீ இல்லாத நேரம் நான் தேடினேன்**
**வாடி வாடி மானே**

**ராசா என் ராசாக்கண்ணு**
**ஒன்ன நம்பி வந்த ரோசாக்கண்ணு**

**ஒன்னோட ஒண்ணா நின்னு**
**தினம் உன்னை எண்ணும் சின்னப்பொண்ணு**

**மாலைக்கும் மாலை என்மாமன் பொண்ணு சேல**
**அழைக்கும் வேள அசத்தும் ஆள**
**சேலைக்கும் மேல நான் சேர்ந்திருக்கும் சோல**
**கட்டுங்க வாழ கொட்டுங்க பூவ**
**நீ கூறும் வேள இனிவேறென்ன வேல**
**ஏன் மாமந் தோள தெனம் நான் சேரும் மால**
**ஒண்ணு தாங்க கூரச் சேல**
**காலம் சேர்ந்ததும் மால மாத்தணும்**
**காதல் கத சொல்லி போத ஏத்தணும்**
**வாடி வாடி மானே**

**உள்ளத்துக்குள்ள நீ சொன்ன கத நூறு**
**நெனச்சுப்பார்த்தா இனிக்கும் பாரு**
**கண்ணுக்குள் உன்ன நா கட்டி வச்சேன் பாரு**
**கலைப்பதாரு பிரிப்பதாரு**
**தேனோட பாலும் தினம் நான் ஊட்ட வேணும்**
**பூவான வானம் அதில் போய் ஆட வேணும்**
**இனி மேலே என்ன வேணும்**
**நாளும் பொழுதெல்லாம் உன்ன நினைக்கிறேன்**
**தனியா படுத்துத்தான் சொகமா ரசிக்கிறேன்**
**ராஜா ராணி போலே**

**LINK : https://youtu.be/4sshvPr2HXk**

# துர்காமாதா:

# எனது வாசிப்பு அனுபவங்கள் – அரவிந்த்.

இது நாகர்கோவிலைச் சேர்ந்த உதவிப்பேராசிரியையாகப் பணியாற்றும் ஜீவாவின் முதல் புதினமா? நம்ப முடியவில்லை (என்ன ஆழமான கருத்துச்செறிவுமிக்க விவாதங்கள்)!

இவரது “தற்கொலைக்கடிதம்” கதைத்தொகுப்பிலும், வலைப்பதிவுகளிலும் முகநூலிலும் சிரிப்பு நடையில் தனது சொந்த அனுபவங்களையும் சீரியசான நடையில் பெண்களின் துன்பங்களையும் இன்னபிற சமூகச்சிக்கல்களையும் தீர்வுகளோடு அலசுவதை நாம் படித்திருக்கிறோம்.

தோழர்களுடனான விவாதங்களுக்குப்பின் மேலும் எவ்வளவு ஆழமாக சமூக சிக்கல்களை புரிந்திருக்கிறார் என்பதற்கு இப்புதினமே சான்று.

வட இந்தியர்களை நம் பிழைப்புக்கு வேட்டு வைப்பவர்கள், நம் வேலைகளையெல்லாம் பறிப்பவர்கள், பாலியல் குற்றமிழைப்பவர்கள் என்ற பிரச்சாரங்கள் வைக்கப்படும் இந்த காலக்கட்டத்திற்கு மிகப் பொருத்தமான புத்தகம் இது.

வட இந்திய ஏழைகள் யார்? எந்தெந்த சூழ்நிலைகளில் வேலைக்கு இங்கே வருகிறார்கள்? அரசியலும் அதிகாரவர்க்கமும் கொண்ட முதலாளித்துவ சமூகம் அவர்களை எந்தெந்த இழிநிலைகளுக்கு தள்ளுகிறது? கணத்திற்கு கணம் பெருகிவரும் பாலியல் குற்றங்களை எப்படி தடுப்பது போன்ற பல கேள்விகளுக்கு விடையே இப்புத்தகம்.

"உத்திரப்பிரதேசம் குலாபி கேங்க்" இயக்கம் போன்ற ஜார்க்கன்டில் ஒரு போராளி இயக்கத்தில் உன்னத லட்சியத்தோடு போராடுபவள் குறும்பும் குதூகலமும் தைரியமும் நிறைந்த கதாநாயகி துர்கா. அதிகாரவர்க்க சுரண்டலை எதிர்த்து யாரைக்காக்க முனைகிறார்களோ அம்மக்களே இவர்களை நம்பாமல் ஏன் எங்கே

போகிறார்கள் என்ற கேள்வியோடு ரியாசோடு தனக்கிருந்த காதலையும் தியாகம் செய்து தமிழகம் நோக்கி காண்ட்டிராக்டர்களோடு புறப்படுகிறாள் நாயகி.

இங்கு வந்த பிறகு அவள் சந்திக்கும் தொழிலாளர்கள், எதிர்பார்ப்புகளோடு வந்தவர்களை மனசாட்சிக்கு புறம்பான வேலைகளை நோக்கி தள்ளப்படும் நிலைமைகள், பணமும் அதிகாரமும் அவர்களை பந்தாடும் விதங்கள், தோழர்களோடு விரிவாக விவாதித்து அவள் கண்டடையும் தீர்வுகள், இதற்கிடையில் அவளே ஒரு மாபெரும் அரசியல் சூதாட்டவழக்கில் சிக்கி என்ன ஆகிறாள் என்பதே கதைச்சுருக்கம்.

சமூகநீதியை வலியுறுத்தும் உயரிய போராளி இயக்கங்களையும் மீறி நுகர்வுவெறியை தூண்டிலாகக் கொண்டு முதலாளித்துவம் எப்படி மக்களை பணத்தை

நோக்கி பைத்தியமாக ஓடவைத்து, எந்த எல்லைக்கும் சென்று, எப்பாவத்தையும் செய்யவைக்கிறது என்று தோழர்களால் மிகத்தீவிரமாக விவாதிக்கப்படும் பக்கங்கள் இன்றைய சமூகம் முழுமையும் படிக்கவேண்டிய பொக்கிஷங்கள்.

இரண்டு வயதுக் குழந்தைகளுக்கே தொடுகைகளின் வகைகளை (good touch, bad touch) கற்றுக்கொடுப்பதன் அறிவீனத்தை எடுத்துக்காட்டி இவ்வகை விஷயங்கள எப்படி நம் பண்பாட்டிலேயே விளையாட்டுச் சீண்டல்களாக மனதில் பதிய வைக்கப்பட்டுகின்றது என்று நிஷா எடுத்துரைக்கும் காட்சி படைப்பின் உச்சம்.

துர்காவைக் காக்க ரியாஸ் உட்பட நண்பர்கள் செய்யும் தந்திரங்கள் பக்கங்களின் வேகத்தைப் பெருக்கி வாசகர்களை ஒரே மூச்சில் வாசித்து முடிக்க வைக்கிறது.

புதினம் மிக விரைவாக முடிந்துவிட்ட உணர்வால் அடுத்த புத்தகங்களில் எந்தன் எதிர்ப்பார்ப்புகளை இங்கே பதிவுசெய்கிறேன்.

1. பாலியல் குற்றங்கள் பெருகிவிட்ட புள்ளிவிவரங்களை வைக்கும் ஆசிரியரின் பிரதிபலிப்பாக தெரியும் சுடரொளியின் கூற்றுகள் "சமூக ஊடகங்களின் பெருக்கத்தாலேயே இயல்பாக இருப்பவை பெரிது படுத்தப்படுகின்றன" என்ற சிலரின் கூற்றுகளுக்கு பதிலளிப்பதாக அடுத்த படைப்பு இருக்கவேன்டும்.

2. பாலியல் குற்றங்களை செய்யும் ஆண்களை கன்டுகொள்ளாமல் பெண்களே மீண்டும் மீண்டும் குற்றம் சுமத்தப்படுகிறார்கள் என்று கூறும் நாம் இதே நுகர்வு கலாச்சாரத்திற்கு அடிமையாகி சுரண்டலின் பிரதிதிகளாய் செயல்படும் சில மேல்தட்டுவர்க்கப் பெண்களையும் எப்படி தூய சிந்தனையுள்ளவர்களாக மாற்றுவது என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உங்களின் அடுத்தடுத்த படைப்புகள் இருக்கவேண்டும்.

3. கல்வியை விளையாட்டோடும் உடற்பயிற்சியோடும் சுவாரசியமாக தரவேண்டும்

என்று பள்ளிகளுக்கு சொல்லும் நாம், செயலிகளும் ரோபோக்களும் பயிற்றுவிக்கப்போகும் வரும் யுகத்தில் எப்படி இச்சிந்தனைகளைசெயலாக்கப்போகிறோம் என்பதை பேசும் படைப்புகளை எதிர்ப்பார்க்கிறோம்.

4. தனிநபர் தரவுகளைக்கொண்டு தனிநபர் விருப்பங்களை வடிவமைக்கும் வல்லமையுள்ள இன்றைய முதலாளித்துவ கருவிகளை நம் உயர்ந்த பாலியல் குற்றமற்ற சீரிய சிந்னைகள் கொன்ட மாந்தர்களை உருவாக்க எப்படி உபயோகிக்கப்போகிறோம் என்று எடுத்துக்காட்டும் உயரிய படைப்புகளை எதிர்ப்பார்கிறேன்.

இத்தகைய ஆழ்ந்த சிந்தனைகளையும் எக்கச்சக்க எதிர்ப்பார்ப்புகளையும் தூண்டிய உங்கள் 'துர்காமாதா'விற்கு எந்தன் வாழ்த்துகளும் வந்தனங்களும்.


நீங்கள் மென்மேலும் பற்பல படைப்புகளை உருவாக்கி சமூகத்தைச் செப்பனிட்டு வெற்றிபெற எந்தன் உளம்கனிந்த வாழ்த்துகள். நன்றியுடன் அரவிந்த்.

# விளம்பரம் !!

## உங்கள் அபிமான எங்கள் ப்ளாக்கில் எதிர்பாருங்கள் !!



**எங்கள் ப்ளாக் வாசகர் L KARTHIK (எல் கே) அவர்கள் அனுப்பிய விளம்பரம் :**



# அ ஆ இ எ அ

(engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் கருத்துகள் மட்டும் இங்கே வெளியிடப்படும் )

மின் நிலாவின் தோற்றம் மெருகேறி வருகிறது.
மின் நிலாவுக்கென்று ஒரு லோகோ அவசியம். நம்மிடம் ஓவியர்களும், கணினி விற்பன்னர்களும் இருகிக்கிறார்களே, அவர்களிடம் ஆலோசனை கேட்கலாம். அல்லது இதில் ஒரு போட்டியாக அறிவியுங்கள். வாசகர்கள் கடிதங்களை பிரசுரித்திருக்கலாம்.

ராக்ஷஸன் கவிதையில் ஜீ.வி. சாருக்குள் இருக்கும் கம்யூனிஸ்ட் வெளிப்பட்டிருக்கிறார்.

தர்மாத்மா அம்சம்! படம் மட்டும் வர்ணனைக்கு பொருந்தவில்லை.

பழங்கணக்கில் என்னுடைய மைதா பக்கோடாவைப் பிரசுரித்து என்னை கௌரவித்ததற்கு நன்றி.

அன்புடன், பானுமதி வெங்கடேஸ்வரன்

======================

ஒரு நண்பர், லோகோ வடிவமைத்து அனுப்பியிருக்கிறார்.

மின்நிலா

தமிழ் விழா -- சுவையில் பலா -- உற்சாக உலா

இந்த லோகோவை வடிவமைத்து அனுப்பியிருப்பவர் என் இனிய நண்பர் லாரன்ஸ் பிரபாகர்.



இதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யவேண்டுமா என்பது குறித்து வாசகர்கள் கருத்துகள் எழுதி, engalblog@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

நன்றி.

===========

மின் நிலா இதழைக் கண்டேன். தொகுத்து, படங்களுடன்
வடிவமைத்துத் தந்துள்ள
விதம் சிறப்க உள்ளது. வலைப்பூவில் படிக்காமல் விடுபட்டதைப்
படிக்க ஒரு
வாய்ப்பாக இது அமைகிறது. அறிவித்துள்ள புதிய திட்டங்கள்
வரவேற்கத்தக்கன.
முயற்சிக்கு மனம் நிறைந்த பாராட்டுகள்.

Dr.B. Jambulingam

[Assistant Registrar (Retd), Tamil University]

19 S N M Rahman Nagar, East Gate

Thanjavur, Tamil Nadu 613 001, India

Mobile: 9487355314

=======

ஆகிரியர்களுக்கு

படங்கள் எல்லாம் மிக மிக அழகாக, அட்டகாசமாக இருக்கின்றன.

# மின்நிலா 006

**மின்நிலா 4 ல் ஜிவி அண்ணா அவர்களின் கவிதையை ரசித்தோம்.**

**மின்நிலா 5 ல் வல்லிம்மாவின் வலை அறிமுகம், முதல் அறிமுகமாக அமைந்தது சிறப்பு. பொதுவாக நம் வீட்டு விசேஷங்களில் நல்ல நாட்களில் நம் வீட்டுப் பெரியவர்களின் ஆசிகள் வாங்குவது வழக்கம் இல்லையா அது போன்ற வாழ்த்து கிடைத்ததாகவே எண்ண வைத்தது.**

**மற்றும் எல்கே, சௌம்யா. கிச்சன் யு வில் வருவது மகிழ்ச்சி.**

**சமீப காலமாக அ வும் தவும் எபியில் இடம் பெறாமல் கொஞ்சம் டல்லாகிப் போனதை த வும் அ வும் வந்து மின்நிலாவை ஒளிரும் பௌர்ணமியாக்கியிருக்கிறார்கள்! ஹா ஹா ஹா ஹா**

**மின்நிலா எப்போதும் பௌர்ணமியாக இருந்திட வாழ்த்துகள்!**

**கீதா (தில்லையகத்து)**



# பழங்கணக்கு

**சரியாக இன்றைக்கு பதினொரு வருடங்களுக்கு முன்பு... எங்கள் ப்ளாக் ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் இருபத்தெட்டாம் தேதி. ஞாயிற்றுக்கிழமை, முதல் பதிவு காலை 7.22 மணிக்கு. (பூர நட்சத்திரத்தில் சுப ஜனனம். சிம்ம ராசி!) பூரம் நட்சத்திரம் நட்சத்திர வரிசையில் பதினோராவது நட்சத்திரம்!**

**இன்று (28-06-2020) காலை நாங்கள் பதினொரு வருடங்கள் முடித்து பன்னிரெண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்ற நாள், உத்திர நட்சத்திரம் - நட்சத்திர வரிசையில் பன்னிரெண்டாவது நட்சத்திரம்!**

**ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை 4017 நாட்கள் ஆகின்றன. ( 4 + 0 + 1 + 7 = 12)**

**இன்றளவில் ரசிகர் மன்ற உறுப்பினர்கள் : 570 ( 5 + 7 + 0 = 12)**




**இதுவரை எங்கள் ப்ளாக் பதிவுகளில், அதிகம் பேர் பார்த்து, படித்த TOP 5 பதிவுகளின் சுட்டிகள் :**

1) திரிசங்குபாகம் - கீதா ரெங்கன் ரெஸிப்பி

2) வெள்ளி வீடியோ : என் வாழ்க்கையில் நீ பாதி உன் வாழ்க்கையில் நான் பாதி

3) எனக்கு வந்த அதிகாலைக் கனவு. என்ன பலன்? நீங்கள் சொல்லுங்கள்.

4) கதை : தனிக்குடித்தனம் 2017 - பானுமதி வெங்கடேஸ்வரன்

5) அமானுஷ்ய அனுபவங்கள் :: ஸ்ரீராம்

வாசகர்களுக்கு எங்கள் நன்றி.

## ALL ++++

1) மத்திய பிரதேசம், நீமச் மாவட்டத்தில் பஸ் நிலையத்தில் டீ விற்பனை செய்து வரும் சுரேஷ் கங்க்வாலின் மகளான ஆஞ்சல் கங்க்வால் 24 சமீபத்தில் இந்திய விமானப் படையின் விமானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.ஐதராபாதை அடுத்துள்ள டிண்டிகல்லில் உள்ள விமானப் படைஅகாடமியில் பயிற்சி முடிந்த அவர் போர் விமானங்களை இயக்க உள்ள ஒரு சில பெண் விமானிகளில் ஒருவராக திகழ்கிறார்...



2) மூன்றரை ஏக்கர் நிலத்தில் உளுந்து, வெண்டைக்காய், தக்கைப்பூண்டு என கிணற்று நீரை பயன்படுத்தி அடுத்தடுத்து சாகுபடி செய்து கோடையிலும் விவசாயத்தில் குன்றாத வருமானம் ஈட்டி வருகிறார் மதுரை திருப்பாலையை சேர்ந்த ஆசிரியை பிரசன்னா. இவர் எம்.எஸ்ஸி., (இயற்பியல்) மற்றும் பி.எட்., பட்டங்கள் பெற்று திருப்பாலை நல்லமணி அரசு உயர் நிலைப்பள்ளியில் முதுகலை பட்டதாரி ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.


3) வயது, 14 தான். ஒரு கம்பெனிக்கு, சி.இ.ஓ.,... **'டிரம்மர்' சரண்.**



4) இந்த கொரோனா காலத்தில் மாணவர்களுக்கு பாடங்கள் தொடர்பு விட்டுப் போகக்கூடாது என்பதற்காக அவர்கள் இருக்கும் வீடுகளுக்கே சென்று பாடம் நடத்திவரும் **ஆசிரியர் தமிழரசன்.**



# எலன் மஸ்க் – ஏ ஸைன்டி:பிக் மார்வெல்



ரமா ஸ்ரீநிவாசன்

**அப்துல் கலாம் அவர்களின் அரிய வார்த்தைகளில் :**

**"Dream, dream, dream. Dreams transform into thoughts and thoughts result in action"**

**இவ்வாக்கியத்தின் கருத்தை உண்மைப்படுத்தினாரோ என்று ஐயுறும் அளவிற்கு எலன் ரீவ் மஸ்க் என்பவர் தன் வாழ்க்கைப் பாதையை வழி நடத்தி வருகின்றார்.**

**எலன் ரீவ் மஸ்க் என்பவர் மேல் நாட்டைச் சேர்ந்த ஓர் இன்ஜினியர், தொழில்துறைப் பொறியாளர், தொழில்நுட்ப முனைவாளர் மற்றும் ஓர் ஈடில்லா பரோபகாரர்.**



**என்ன இவ்வளவு முகவுரை என்று பார்க்கின்றீர்களா?**

**சொல்கிறேன்.**

இவருடைய பிரம்மாண்டமான சாதனைகளைப் பற்றி நான் இன்று பேனா ஏந்தும் காரணம், ஜூன் 28ஆம் தேதி ( அதாவது நாளை) அவர் தன் 50 ஆவது வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கிறார். அதற்குள் எத்தனை சாதனைகள், எத்தனை நல்லெண்ண உபகாரங்கள், எத்தனை ஆச்சரியப்பட வைக்கும் ஹிமாலய வெற்றிகள்? மேலும் படியுங்கள். நீங்களும் ஆமோதிப்பீர்கள்.

இவர் ப்ரிடோரியா, தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவர். ஆயின் இவர் தென் ஆப்பிரிக்கா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்குமான குடிமகனுக்கான சான்றுள்ளவர்.

(எலனின் குடும்ப வாழ்க்கை ஏற்றங்கள் + மாற்றங்கள் நிறைந்தது. முதல் மனைவி ஜஸ்டின் வில்சன் (2000 - 2008) மூலம் 1+2+3 = 6 பையன்கள். அதில் முதல் பையன் பத்து வாரங்கள் மட்டுமே உயிர் வாழ்ந்தான். இரண்டாம் மனைவி டாலுலாஹ் ரைலீ ( 2010 - 2016) என்னும் பாடகி. அதற்குப்பின் ஆம்பர் ஹெர்ட் என்னும் அமெரிக்க நடிகையுடன் ஓராண்டு நட்பு. அதற்குப்பின் 2018 தொடங்கி, கனடா பாடகி Grimes என்பவரோடு வாழ்கிறார் எலன்.

கிரைம்ஸ் - எலன் தம்பதியர்க்கு இந்த ஆண்டு மே நான்காம் தேதி ஒரு பையன் பிறந்துள்ளான். அவனுடைய பெயர் "X Æ A-12" என்று வைத்தார்களாம். கலிபோர்னியா சட்டப்படி நவீன ஆங்கில அகராதியில் இல்லாத எழுத்துகள் பெயரில் வரக்கூடாதாம். அதனால் அந்தப் பையனின் பெயர் தற்போது, "X AE A-XII" என்று மாற்றப்பட்டுள்ளது. )

தன் பதினேழாவது வயதில் ப்ரிடோரியாவை விட்டு கனடாவை அடைந்தவர் குவீன்ஸ் பல்கலை கழகத்தில் இரண்டு வருடங்கள் படித்த பின்னர் பென்ஸில்வேனியா பல்கலை கழகத்தில் சேர்ந்து பொருளாதாரத்திலும் இயல்பியலிலும் (Physics) பட்டம் பெற்றார். பிறகு 1995ல் கலிஃபோர்னியா சென்றவர் தன் சகோதரருடன் சேர்ந்து ஜிப்2 என்னும் ஓர் வலையுலக கம்பெனியைத் துவங்கி 1999ல் அதை காம்பேக் நிறுவனத்திற்கு 340 மில்லியன் டாலர்களுக்கு விற்றார். இதற்கு பின் மஸ்க், எக்ஸ்.காம் (X.com)

என்னும் ஓர் நிகழ்நிலை வங்கியை (online bank) துவக்கி, அதை 2000ஆம் ஆண்டு கன்ஃபைனிடி (Confinity) நிறுவனத்துடன் சேர்த்தார். பே பால் (PayPal) என்னும் ஓர் சேவையை 1999ல் அறிமுகம் செய்து அதன் வெற்றியினால் கவரப் பட்ட ஈ பே (eBay) இக்கம்பெனியை 1.5 பில்லியன் டாலர்களுக்கு அக்டோபர் 2002ல் வாங்கியது.

இதைத் தவிர, எலன் மஸ்க் a) ஸ்பேஸ்X (Aerospace technology concern) மற்றும் டெஸ்லா இன்க் (எலெக்டிரிக் வாகனங்கள் உற்பத்தி) கம்பெனிகளின் சீஃப் எக்ஸிகூட்டிவ் ஆஃபீஸர், b) போரிங் (டனல் போர் செய்யும்) கம்பெனியையும் நிறுவியவர், c) ந்யூராலின்க் (மனித மூளையையும் கம்ப்யூட்டரையும் இணைக்கும்) நிறுவனம், ஓபன் ஏ.ஐ,யின் (Open AI) இணை நிறுவனர் மற்றும் இணைத் தலைவர் என்று அடுக்கிக் கொண்டே
போகலாம்.

டிசம்பர் 2016ல் ஃபோர்ப்ஸின் ”World’s Most Powerful People” லிஸ்ட்டில் 21வது இடத்தைப் பிடித்தார். பின்னர், 2018ல் ராயல் ஸொஸைடீயின் ஃபெலோவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் அதே ஃபோர்ப்ஸின் “Most Innovative Leaders of 2019” லிஸ்டில் முதல் இடத்தைப் பிடித்தார். அவர் தன் சுய உழைப்பால் ஓர் பில்லியனராக உருவாகி ஜூன் 2020ல் 38.8 பில்லியன் டாலர்களுக்கு சொந்தமானவராகியிருக்கின்றார். அது மட்டுமின்றி உலகிலேயே இவர்தான் ஓர் வாகன உற்பத்தி நிறுவனத்தின் மிக நீண்ட கால சீஃப் எக்ஸிக்யூடிவ் ஆஃபீஸராக (CEO) நிலைத்திருக்கின்றார்.

தன் வணிக நாட்டங்களை தாண்டி மஸ்க் ஹைப்பர் லூப் என்னும் ஓர் அதிவேக போக்குவரத்து அமைப்பை கற்பனை செய்து நிறுவினார். “உலகத் தரத்தை மாற்றி மனித குலத்திற்கு உதவி” என்பதையே தன் மூன்று நிறுவனங்களான ஸ்பேஸ்X, டெஸ்லா மற்றும் ஸோலார் ஸிடி ஆகியவையின் இலக்குகளாக வைத்தார்.

அவருடைய அசைக்க முடியாத இரு இலக்குகள் நிலையான ஆற்றல் (sustainable energy) கொண்டு உலக வெப்பத்தைக் குறைத்தல், செவ்வாய் கிரகத்தில் ஒரு மனித காலனியை அமைத்து ஒட்டு மொத்த மனித அழிவைத் தடுப்பது ஆகியவை.

மஸ்க்கின் ஸ்பேஸ்X இது வரை 100 மெர்லின் 1டி என்ஜின்களை தயாரித்துள்ளது. ஒவ்வொரு மெர்லின் 1டி என்ஜினும் 40 சாதாரண கார்களை செங்குத்தாக தூக்கும் சக்தி கொண்டது.

2006ல் நாஸா தனக்கு குழுவினர் மற்றும் சரக்குகளை விநியோகிக்க ஸ்பேஸ்X நிறுவனத்தை மற்றொன்றுடன் தேர்ந்தெடுத்தது. டிசம்பர் 23, 2008ல் மறுபடியும் 1.6 பில்லியன் டாலர் கமர்ஷியல் ரீசப்ளை சர்வீஸஸ் நிரல் கான்டிராக்ட்டையும் அமெரிக்க ஸ்பேஸ் ஷட்டில் காலம் 2011ல் முடிந்த பின் ஸ்பேஸ்Xற்கே வழங்கியது. இதன்படி ஸ்பேஸ்X உலக சரித்திரத்திலேயே முதல் முறையாக ஓர் வணிக ரீதியான நிறுவனம் இன்டர்னேஷனல் ஸ்பேஸ் ஸ்டேஷனுக்கு ராக்கெட் ஏவுதலுக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட பெருமையை அடைந்தது.

மலிவான வின்வெளிப் பயணத்தின் திறவுகோல் ராக்கெட்டுகளை மீண்டும் பயன் படுத்தக் கூடிய வசதியுள்ளவையாக உற்பத்தி செய்வதேயாகும் என்று அழுத்தமாக நம்பியவர் மஸ்க்.

2017ல் ஸ்பேஸ்X வெற்றிகரமாக 18 பயணங்கள் முடித்து தன் முந்தைய ஆண்டின் எட்டு பயணங்களையும் மிஞ்சியது.



2017 க்குள் சிறப்பான வளர்ச்சியடைந்து செப்டம்பர் 2019ல் முதல் ப்ரோடோடைப் வாகனம் உலகுக்கு காட்டப்பட்டது. 2012ல் புதிய ராக்கெட் இஞ்சின் (Raptor) உருவாக்கம் துவங்கி ஆகஸ்ட் 2019ல் வெற்றிகரமான முதல் சோதனை பயணம் மேற்கொள்ளப் பட்டது.

இவை யாவற்றிற்கும் பின்னால் மஸ்க் கம்பீரமாக நின்று தன் அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் உற்சாகப் படுத்தி முன்னேற்றியதுதான், வெற்றியின் ரகசியம்.

மே 30, 2020 அன்று ஸ்பேஸ்X தன்னுடைய முதல் டெமோ2 மனிதன் இயக்கிய ஃப்ளைட்டை விண்வெளிக்கு ஐ.எஸ்.எஸ்ஸுடன் சேர்ந்து அனுப்பி இச்சாதனையை புரிந்த முதல் தனியார் நிறுவனமாகியது. மேலும் இதுவே முதல் முதலாக ஓர் அமெரிக்க விண்வெளி வீரர் அமெரிக்க மண்ணிலிருந்து அமெரிக்க ராக்கெட்டில் விண்வெளிப் பயணம் செய்ததாகும்.

2006ல் எலன் மஸ்க்கின் வார்த்தைகளில் டெஸ்லாவின் முதன்மை திட்டம் :

“ஸ்போர்ட்ஸ் கார் உருவாக்குவது. அவ் வருமானத்தைக் கொண்டு ஓர் மலிவான காரை உற்பத்தி செய்வது; அதிலிருந்து வரும் வருமானத்தை வைத்து இன்னும் கூட மலிவான ஓர் காரை வெளிக்கொண்டு வருவது; இதைச் செய்யும்போதே பூஜ்ய உமிழ் எலெக்ட்ரிக் காரை (Zero Emission Vehicle) தயாரிப்பது” என்பதுதான்.

ஆம். இத்திட்டத்தை வெற்றிகரமாக ஜூலை 2016ல் நிறைவேற்றினார்.

“யாவரும் காணும் ஒரே செயலை வித்தியாசமான கோணத்தில் யோசிப்பது என்பதுதான் படைப்பாற்றல்” என்று நம் அப்துல் கலாம் கூறியுள்ளார். இவ்வரிகளை தன் வித்தியாச சிந்தனையால் நிதர்சனமாக்கி இருக்கின்றார் எலன் ரீவ் மஸ்க்.

அவர் ஓர் ட்வீட் விஷயத்தில் அமெரிக்க அரசாங்கத்தால் சட்டப்படி வழக்கில் சிக்கினாலும், பின்னர் லாவகமாக வெளி வந்து விட்டார்.

ஜூலை 2018ல் தாய்லாந்திலுள்ள தாம் லுவாங்க் சுரங்கத்தில் சிக்கிய மனிதர்களைக் காப்பாற்றி வெளிக் கொணர்வதற்காக

குழந்தை அளவில் ஓர் மினி நீர் மூழ்கி கப்பலை உருவாக்கி அளித்தார். இதற்காக மஸ்க்கை கௌரவித்து மார்ச் 2019ல் தாய்லாந்து அரசு "மெம்பர் ஆ்ஃப் தி ஆர்டர் ஆ்ஃப் தி டைரெகன்பான்" என்ற விருதை மஸ்க்கிற்கும் அவரது குழுவிற்கும் அளித்தது.

பரோபகாரம் :

1. 2010ல் ஸோலார் ஸிடியுடன் சேர்ந்து அலபாமாவின் சவுத் பே கம்யூனிடி அலையன்ஸிலுள்ள புயல் நிவாரண அமைப்பிற்கு 25 கிலோ வாட் சூரிய சக்தி அமைப்பை மஸ்க் பௌண்டேஷன் அமைத்துக் கொடுத்தது.

2. ஜூலை 2011ல் மஸ்க் ஃபௌண்டேஷன் ஜப்பானிலுள்ள ட்சுனாமியால் சீரழிக்கப் பட்ட சோமாவிற்கு 250,000 டாலர்கள் நன்கொடையாக கொடுத்து அங்கு ஓர் சூரிய சக்தி பிராஜக்டிற்கு வழி செய்தது.

3. ஜூலை 2014ல் மஸ்க் வார்டென்கிலிஃப்ஃபில் ஓர் டெஸ்லா அறிவியல் சென்டர் அமைப்பதற்காக 1 மில்லியன் டாலர்களை நன்கொடையாக வழங்கியதோடல்லாமல் அங்குள்ள மியூஸியம் கார் பார்க்கில் ஓர் டெஸ்லா சூப்பர் சார்ஜர்ரையும் அமைத்துக் கொடுத்தார்.

4. செயற்கை நுண்ணறிவை மனித குலத்திற்கு உபயோகமாக செலவழிப்பதற்காக மஸ்க் ஜனவரி 2015ல் 10 மில்லியன் டாலர்களை ஃபயுச்சர் ஆஃப் லைஃப் இன்ஸ்டிடூட்டிற்கு கொடையாகக் கொடுத்து ஓர் உலகளாவிய ஆராய்ச்சி நிரலை துவங்க ஏது செய்தார்.

5. 2015லிலிருந்து மஸ்க் X பிரைஸ் ஃபௌண்டேஷனின் அறங்காவலராகவும் "தி கிவிங்க் பிலெட்ஜ்"ஜின் signatory ஆகவும் இருக்கின்றார்.

6. அக்டோபர் 2018ல் ஃப்லின்ட் நீர் நெருக்கடியை தாண்ட வேண்டி மஸ்க் ஃபௌண்டேஷன் 480,000 டாலர்கள் வழங்கி புதிய

வடிகட்டுதல் அமைப்புடன் கூடிய நீர் ஃபௌண்டன்களை எல்லா ஃப்லின்ட் மிச்சிகன் பள்ளிகளிலும் அமைத்தது.

7. அக்டோபர் 2019ல் மஸ்க் 1 மில்லியன் டாலர்களை “டீம் ட்ரீஸ்” என்னும் ஓர் 20 மில்லியன் மரம் நடும் முயற்சிக்கு ஆர்பர் டே ஃபௌண்டேஷனுடன் நன்கொடையாக வழங்கினார்.

ஏறக்குறைய 23 வேறுபட்ட பிரமிக்க வைக்கும் விருதுகளைப் பெற்றுள்ள எலன் மஸ்க் இவ்விருதுகளின் பெருமைக்கும் மதிப்பிற்கும் கூடுதல் பெருமை சேர்த்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நமது நாட்டுப் பிரதமர் அமெரிக்க பயணத்தின் போது எலன் ரீவ் மஸ்க்கும் அவர் சந்தித்த பிரபலங்களில் ஒருவர் என்றால் அவரின் தகுதியை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.



=======================

**சென்ற வார எம் எல் வி பதிவில் பலர் கேட்டதற்கிணங்கி, இதோ சில எம் எல் வி பாடல்கள்**

**சுட்டி :@ எல்லாம் இன்ப மயம் (பி லீலாவுடன்)**

**@ சின்னஞ்சிறு கிளியே**

# சுவாரஸ்யமான நபர்கள்

=========

K G Y Raman

**முன்னுரை :**

**"உங்களுக்குத் தெரிந்த சுவாரசியமான நபர்களை பற்றி எழுதினால் நன்றாக இருக்கும்" என்று ஆசிரியர் குழுவிலிருந்து ஒரு ஆலோசனை வந்தது.**

**உண்மைதான். நம் வாழ்க்கையில் பலப்பல சுவாரசியமான மனிதர்களை சந்திக்கிறோம். அவர்களோடு பழகி அவர்களது, பலம் பலவீனம் என்ன என்பதை நெருங்கியிருந்து தெரிந்து கொள்கிறோம். அவர்களில் சிலர் விசேஷ திறமைகள் குணங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். உண்மையில் யாரானாலும் அவர்களிடம் சில ஸ்பெஷல் அம்சங்கள் இருக்கும். அவற்றில் ஒரு சில அவருக்கு பெருமை சேர்ப்பதாகவும் சில அவரை ஒரு தவறான வெளிச்சத்தில் காட்டுவதாகவும் இருக்கும்.**


**புகழ்ச்சியானவற்றை சொல்வதாலோ, அல்லது அவரை உயர்த்தி எண்ணக்கூடிய செய்திகளை பொது தளங்களில் இடுவதாலோ ஆபத்து எதுவும் இராது. வாஸ்தவத்தில் அதனால் பலப்பல நன்மைகள் கூட விளையலாம். ஆனால் எதிர்மறையான செய்திகள் பல தரப்பட்ட சங்கடங்களை உண்டாக்க வாய்ப்புகள் பிரகாசமாக (?) இருக்கின்றன. இதன் காரணமாகத்தான் எழுத்தாளர்கள் புனை பெயரில் கதைகள் எழுதுகிறார்கள் போலும்.**

**"ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே " என்று பொதுவாகச் சொல்வதுண்டு. ஊர் அல்லது பேர் மட்டுமே சொல்லலாம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.**

ஊரையும் சொல்லக் கூடாதுதான், தவறிப்போய் சொல்லி விட்டால் பேரை மட்டுமாவது சொல்லாமல் இரு என்று அறிவுரை சொல்வதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஊரைச் சொல்லிவிட்டால் அந்த ஊரில் நம்முடன் இருந்தவர்கள் எளிதாக நாம் யாரைக் குறிப்பிடுகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டுவிடுவார்கள். அதுதான் உண்மை எழுத்தாளரின் லக்ஷணம். பெயர் மட்டும் சரியாகச் சொன்னால் உறவினர்கள் அனைவருக்கும் யார் என்று உடனே தெரிந்துவிடும்.

அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் யாரைப் பற்றியும் அவரது பலவீனங்களை பற்றி சொல்வது சரியாக வராது. அதுவும் உயிருடன் இல்லாதவரைக் குறித்து நெகடிவ் ஆக எதுவுமே சொல்வது அநாகரீகமாகக் கருதப்படுகிறது. சுற்றங்களில் நடந்த ஒரு விபரீத சம்பவம் குறித்து எழுத ஒரு துடிப்பு எந்த ஒரு எழுத்தாளருக்கும் மிகப் பலமாக இருக்கும். அவ்வாறு எழுதி மாட்டிக்கொண்டு திரு திரு வென்று விழித்தவர்கள் உண்டு. ஆனால் அது பற்றி எழுதாவிட்டால் கையும் காலும் துரு துரு வென்றிருக்கும். அதுதான் உண்மை எழுத்தாள லட்சணம்.

(தொடரும்)



# எழுது பொருள் - Kayjee

3 வது படிக்கும் போது அப்பா பாண்டி போய் வருகையில், ஒரு புதிய பென்சிலும் அல்லாத பேனாவும் அல்லாத எழுதுகோல் கொண்டுவந்தார்.

BiC என்று ஒரு கட்டத்துக்குள் வெள்ளை எழுத்து. Noir என்றும். ஈட்டி முனை மாதிரி பித்தளையில்.. மூடியைக் கழட்டி எழுதினால் கொஞ்சம் விட்டு விட்டு எழுதும். Paint வாசனை .. நம் கையில் பூமாலை எதுவும் கிடைக்கவில்லை என்றால் கிடைத்த பொருள் எதுவாயினும் கடித்துத் திருகி துருவி, கல்லின் கீழ் வைத்து நசுக்கி ஆராயப்படும்.

அப்படி ஆராய்ந்து நோக்கிய வகையில் அறிந்தது. பேனாவின் உடல் பிளாஸ்டிக். அனலில் காட்டினால் உரு மாறும். பித்தளை ஈட்டிமுனையின் முடிவில் 1mm விடக் குறைவான விட்டத்தில் ஒரு வெள்ளை உலோகப் பந்து! பித்தளை ஈட்டியின் மறு புறம் பேனாவுக்குள் ஒரு கண்ணாடி போன்ற பிளாஸ்டிக் குழாய். அதில் தான் மை நிரப்பப்பட்டிருந்தது.

கையிலோ எப்போதும்போல சட்டையிலோ பட்டால் போகவே போகாது. Stove பற்ற வைக்க வைத்திருந்த ஸ்பீரிட் போட்டுத்துவைத்தால் போகும்.

பின் நாட்களில் நிறைய மாறி acetone போட்டால் போகக்கூடிய மை வந்தது. Ethylene glycol base என்கிறார்கள். Nail polish மனம் வீசும். இதனால் வரும் கறை acetone ஐ விட வேறு ரசாயணங்களில் நன்கு கரையும்.

அது என்ன வைத்து எழுதுகிறாய் என்று வாங்கிப் பார்த்த தவமரியம்மாள் அதைத் திருப்பிக் கொடுக்க வில்லை. பறிமுதல்? அல்லது குழந்தைக்கு கொடுக்க எடுத்து சென்றிருக்கலாம். குழந்தை பெயர்கூட நினைவிருக்கிறது. குழந்தைராஜ். அவரை நான் 12 வருடம் கழித்து அரவங்காட்டில் சந்தித்த போது கேட்க மறந்து போனேன்.



**மின்நிலா 006 பற்றிய உங்கள் கருத்துகளை engalblog@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்ப மறந்துவிடாதீர்கள்.**

**நன்றி.**

**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

# மின்நிலா 005

